

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. செல்லூர் கோரிப்பாளையம் பகுதி சார்பில் மாவட்டக் கழக செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி கழக செயலாளர்கள் செல்லூர் குறும்பன், ராதாகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றதில் உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம் சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் வ. வேலுசாமி, பெ. குழந்தைவேலு, மா. ஜெயராம், தனச்செல்வம், ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், முருகவேல், இளைஞரணி சௌந்தர்ராஜன், மாணவரணி அன்பு மற்றும் திரளான கழக நிர்வாகிகள் பகுதி கழகத்தினர்கள் கலந்து கொண்டனர்.

### கழகத் தீர்மானக்குழு செயலாளர் அக்ரி கணேசன் -

# பா.பொன்னையன் ஐ.ஏ.எஸ். இல்லத் திருமண விழா!

### அமைச்சர்கள் துரைமுருகன் – கே.என்.நேரு – ஐ.பெரியசாமி – எஸ்.ரகுபதி – சிவ.வீ. மெய்யநாதன் – அன்பில் மகேஸ் பொய்யாமொழி – மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் – எம்.பி. – எம்.எல்.ஏ.க்கள் – அரசு அதிகாரிகள் – கழக முன்னணியினர் நேரில் வாழ்த்து!

புதுக்கோட்டை, செப்.15-

கழகத் தீர்மானக் குழு செயலாளரும் முன்னாள் மாநில வேளாண்மை விற்பனைக் குழு வாரிய தலைவருமான அக்ரி கே.பி.டி. கணேசன் தம்பியும், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை இயக்குனருமான பா. பொன்னையா ஐ.ஏ.எஸ்., மகள் திருமணம் 8ஆம் தேதி புதுக்கோட்டை மாவட்டம் முத்துப்பட்டி னத்தில் உள்ள மணமகன் இல்லத்தில் வெகு சிறப் பாக நடைபெற்றது. விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி முன்னாள் ஒன்றிய கழகச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினருமான பால்சாமி அவர்களின் பேத்தியும், கழகத் தீர்மான குழு செயலாளர் அக்ரி கே.பி.டி.கணேசன் தம்பி பா.பொன்னையா ஐஏஎஸ், இ.சிநேகலதா தம்பதியினரின் மகள் டாக்டர் பா.சௌதாமினி, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டச் முத்துப்பட்டினம் எஸ். ராமச்சந்திரன், கீதா தம்பதியரின் மகன் பொறியாளர் ரா. பால சண்முகம் ஆகியோரின் திருமணம் 08.09.2024 ஞாயிற்றுக்கிழமை புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுகா முத்துப் பட்டினத் தில் மிக சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன், கழக முதன்மை செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர் அமைச்சர் ஐ.பெரியசாமி, அமைச்சர்கள் எஸ். ரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், சிவ.வீ.மெய்யநாதன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், எம்.பிக்கள் திருச்சி சிவா, டி.எம்.செல்வ கணபதி, தங்க தமிழ்ச்செல்வன், எம்.எம்.அப்துல்லா, ஜோதிமணி, துரை வைகோ, கார்த்திக் சிதம்பரம், நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை. முத்துராஜா, பனமரத்துப்பட்டி ராஜேந்திரன், மாங்குடி, விடுதலை சிறுத்தைகள் கட்சி பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் எம்.பி, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சி தலைவர் அருணா ஐ.ஏ.எஸ், செ. ராஜேந்திரன் ஐபிஎஸ், திருச்சி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், தஞ்சை மாநகராட்சி மேயர் சன் ராமநாதன், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், ராமச்சந்திரன், ராமசாமி, புதுக்கோட்டை மாநகர செயலாளர் ஆ.செந்தில், த.சந்திரசேகரன். சுப.சரவணன், சு.சண்முகம், மிசா சி.ராமநாதன், செ.அசோக்பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், பரணி இ.ஏ. கார்த்திகேயன், அரு. வீரமணி, அழ.சுப்பிரமணியன், க.மதியழகன்,

பி.ராஜேஸ்வரி, எஸ்.எஸ். கருப்பையா, ஞான.இளங்கோவன், அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, எம்.லியாகத் அலி, அபுதாஹீர், ஆர்.ஆர்.கே.கலைமணி, இரா.ஆனந்த், எஸ். ஜெயராமன், தென்னலூர் எம்.பழனியப்பன், என். சாத்தையா, இராசு.சந்தோஷ், சி. ஆர்.வி. சித்ரா, எம்.செந்தில்குமார், ஆர்.வி.செல்வம், கலைவாணி சுப்பிரமணியன், என்.வீரய்யா, ஆர். செல்லத்துரை. த. மணிராஜன், க.ராஜேந்திரன், தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ஜான்பாண்டியன், கே.எஸ்.சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், தவ. பாஞ்சாலன், பொன்.ராமலிங்கம், எம்.பரமசிவம், வெ.முத்துக்கிருஷ்ணன், மா.தமிழ் அய்யா, என்.சேட்டு, ஆர். ஆர்.எஸ்.மாரிமுத்து. ஒ.எஸ். வெங்கடாச்சலம், மு.பி.ம.சத்தியசீலன், அ. இளங்குமரன், கே.பி.அய்யப்பன், சி.சண்முகம், ஆர். ஆர்.சாமிநாதன், கே.பி. கே.டி.தங்கமணி, சக்தி ராமசாமி, வே.பொன்துரை, பொன்.கணேசன், அ.முத்து, அரு.வடிவேல், அ.அடைக்கலமணி, அழகு சிதம்பரம், ஆர்.கணேசன், வி.ஆர். இளையராஜா, எஸ்.எம்.சீனியார், கே.எஸ்.ரவி, எல். குமார், உ.முருகேசன், அ. அழகப்பன், கே.சி.சிவக்குமார், நாசர் (எ) செந்தில்குமார், ஆ.பழனிக்குமார், பி.அண்ணாத்துரை, ஜெயலெட்சுமி தமிழ்ச் செல்வன், எம்.எம்.பாலு, சி. அரங்கநாயகம்,

தவசுமணி, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், டாக்டர் செ. குறிஞ்சிவாணன், பொன்.பாரி, தி.முத்து, பாத்திமா பீவி, தேவி, விமலாதி, ராஜா, கே.ஆர்.ராமசாமி, முத்துக் குமார், புத்தாம்பூர் சுப்பையா, டி.எம்.ஆர்.ராமமூர்த்தி டி.வளர்மதி, கே. கணபதி, அ.ரெத்தினம், குமரேசன், கருணாகரன், டாக்டர் சுதர்சன், எஸ்.வி.ஆர். ஜெய் ஸ்டாலின், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், அ.பிரபா, தவசுமணி, மேகநாதன், கவி வேந்தன், மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன், இரா.தமிழ் ராசு, கவிக்குமார்,

நசுருதீன், விளாப்பட்டி சிவா, முகம்மது ரபீக், சே. அருண்குமார், இளைய ராஜா, அன்சாரி பாஷீத், மு.பி.மணி, மணிமொழி மனோகரன், ராஜேந்திர சோழன், அஸ்ரப் அலி, வெற்றிச் செல்வன், டாக்டர் சதீஷ், மகேஸ்வரி சண்முகநாதன், மேகலா முத்து, மாலா ராஜேந்திரதுரை, உஷா செல்வம், டி.செல்வம், கை. பழனிச்சாமி மற்றும் அரசு அதிகாரிகள், உறவினர்கள், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

# ஒன்றே குலம்; ஒருவனே தேவன்!



**நா**ம் நாற்பது கோடி மக்கள். ஆனால் நாலாயிரம் சாதிகளாகப் பிளவு பட்டுப் பாழானோம். ‘ உன் சாதி பெரியது; என் சாதி உயர்ந்தது. நீ மட்டம்; நீ தாழ்ந்த சாதி ‘ என்று நமக்குள் சண்டையிட்டு நாசமானோம். இதைச் சாதகமாக்கிக் கொண்டான் அன்னியன். பாழான சாதிபேதம் இந்த நாட்டில் இருக்கும் வரையில் நாடு உருப்படாது. வீணான சாதி பேதத்தாலேதான் நம் நாடு வெள்ளைக்காரனிடம் இவ்வளவு காலம் அடிமைப்பட்டு இருந்தது. தமிழர்கள் சாதிபேதத்தை அடியோடு விட்டொழிக்க வேண்டும். ‘ ஒன்றே குலம், ஒருவனே தேவன் ‘ என்னும் ஒற்றுமை நமக்குள் வேண்டும்; வகுப்பு வாதம் கூடாது.

**-அண்ணா**



சென்னை, எழும்பூர், பிரசிடென்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் எஸ்.கே.பிரபாகர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி II (தொகுதி II & IIA) நடைபெறும் தேர்வு மையத்தினை நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

### பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் - கழக பவளவிழாவை முன்னிட்டு

# சிவகங்கை மாவட்டத்தில் வீடுகள் தோறும் கழக கொடி ஏற்றிடுவீர்!

### அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் வேண்டுகோள்!

சிவகங்கை. செப். 15-

சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-



கழகத்தலைவர் முதல்வர் அவர்களின் ஆணையின்படி கழகத்தின் பவள விழா ஆண்டினை முன்னிட்டு கழகத்தை உருவாக்கிய பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்த நாளில் கழகக் கொடியினை இல்லங்கள் தோறும், கிராமங்கள், தெருக்கள் தோறும் ஏற்றிடுமாறு உத்தரவிட்டுள்ளார்கள். எனவே நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் 445 ஊராட்சிகளிலும் கழககம்பங்கள் புதுப்பிக்கப்பட்டு புதிதாக இரு வண்ணக் கொடிகளை பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான இன்று 15ம் தேதி ஏற்றிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த கொடியேற்றத்தினை கழகத்தின் மூத்த முன்னோடிகளை வைத்து சிறப்பாக நடத்திடுமாறு ஒன்றிய,நகர, பேரூர், கழகம் மற்றும் ஊராட்சி கழக நிர்வாகிகளை கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள்,மாவட்ட கழக நிர்வாகிகள் ,சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## 23 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**மாஸ்டர் தமிழ்ப்பித்தன் (எ) ம.வேலுச்சாமி**

(மாநில தொண்டரணிச் செயலாளர், தி.மு.க.)

15.9.2001 அன்று கழகத் தலைவரிடம் பதக்கம் பெற்ற மகிழ்ச்சியில் திளைத்த எங்கள் இதய தெய்வத்திற்கு நினைவஞ்சலி!

*மகன்*

**வேல்.உமாகாந்த்** துணைச் செயலாளர்,

**மாநில பொறியாளர் அணி**

### இராமநாதபுரம் மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா 116 வது பிறந்த நாள் விழா!

### மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிக்கை!

இராமநாதபுரம், செப். 15-

இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 116 வது பிறந்த தினத்தை முன்னிட்டு இன்று (15.09.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வு இராமநாதபுரம் மாவட்டக் கழகம் சார்பில் நடைபெற உள்ளது.

ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### அண்ணா தமிழ்க் கழகம் சார்பில்

# காரைக்குடியில் - பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அறிவித்து மரியாதை!

### அ.கதிர்வேல் தலைமையில் நிர்வாகிகள் செலுத்துகின்றனர்!

காரைக்குடி, செப். 15-

காரைக்குடியில் - பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது ஆம் ஆண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இன்று (15.9.2024 ஞாயிறு) காலை 9.00 மணிக்கு அண்ணா அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யும் பொருட்டு அண்ணா தமிழ்க் கழக உறுப்பினர்கள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாது வருகை தந்து வழிபாடு செய்ய வேண்டுமாய் அழைக்கிறோம்.

அறிஞர் அண்ணா அவர்கள் 15.9.1909 ஆம் ஆண்டு பிறந்தார். எனவே இவ்வாண்டு 116ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவினை கொண்டாட உள்ளோம். அவரது இறுதி ஊர்வலத்தில் 82 இலட்சம் மக்கள் அவரைப் பின் தொடர்ந்தார்கள் என்பது கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளதே அவருக்கு கிடைத்த புகழாகும்.

காரைக்குடியில் அண்ணாவின் புகழை ஆண்டு தோறும் பரப்பும் வகையில் 50 ஆண்டுகளாக அண்ணா தமிழ்க் கழகம் எனும் ஒரு இலக்கிய அமைப்பை 1973 ஆம் ஆண்டு தொடங்கி ஆண்டு தோறும் அண்ணா விழாவை சிறப்பாக நடத்தி வருகிறோம். இவ்வாண்டு 50 ஆண்டு அண்ணா விழா பொன்விழாவாக சிறப்பாக நடைபெற இருப்பதுடன் 800 பக்கங்கள் கொண்ட பொன்விழா மலரையும் வெளியிட உள்ளோம். முதல்வர் அவர்களின் வாழ்த்துகளோடு விழா சிறப்பாக நடைபெற உள்ளது. அமைச்சர்கள் மற்றும் தமிழறிஞர்கள் பலரும் பங்கேற்க இசைந்துள்ளார்கள்.

50ஆம் ஆண்டு அண்ணாவின் பொன்விழா சிறக்க அண்ணா மீது பற்றும் பாசமும் கொண்டுள்ள அனைவரையும் வருக! சிறப்பு தருக!! என அண்ணா தமிழ்க் கழகம் சார்பில், அதன் செயலாளர் அ.கதிர்வேல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நாகர்கோவில் மாநகர மேற்கு பகுதி செயலாளர் மு.சேக்மீரான் தலைமையில், நாகர்கோவில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப. ஆனந்த் முன்னிலையில் நாகர்கோவில், ஒழுகினசேரி மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக மாவட்டச் செயலாளர், மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர அவைத் தலைவர் ப.பன்னீர்செல்வம், மாநகர துணை செயலாளர் எம்.ராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.சதாசிவன் உட்பட மாவட்ட, ஒன்றிய, பகுதி கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA–2, BLC மற்றும் கழக பொது உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மாஸ்டர் தமிழ்ப்பித்தன்**

**செப்டம்பர் 15 (2001)**



**கழகத்தில் சாதாரண தொண்டராக இருந்து படிப்படியாக உயர்ந்து தி.மு.க. மாநில தொண்டர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று சிறப்புற பணியாற்றியவர்.**

**2001ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று சிறந்த தொண்டர் அணியின் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் கையால் பதக்கம் பெற்றவர்.**

**தன் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் திருக்கரத்தால் விருதினைப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியில் நின்ற மாஸ்டர் தமிழ்ப்பித்தன் அதே இடத்தில் தன்னுயிரை இழந்தார்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**